# எடுத்துரைப்பு

இந்த ஆசிரியர் வழிகாட்டி நூலில் உள்ள பாடங்களை நல்லமுறையில் எடுத்துரைத்தல் என்பது நல்ல முன்னேற்பாடு மற்றும் நல்ல செய்முறைப் பயிற்சி ஆகியவற்றின் விளைவாகவே ஏற்படும். பாடத்தைச் சுருக்கமான, ஆர்வமான, புரிந்து கொள்ளக் கூடிய மற்றும் இணக்கமான வழிமுறையில் தருதல் என்பதே ஆசிரியரின் நோக்கமாய் இருக்க வேண்டும். வீணாக்கப்படும் இயக்கம் என்பது சலிப்பை உண்டாக்கக் கூடும். இந்தக் காரணத்தினால், ஆசிரியர் ஒரு பாடத்தை நடத்தும் வேளையில் தம் நேரத்தை ஞானமாய்ச் செலவிடும்படி நாட வேண்டும்.

ஒரு பாடத்தை எடுத்துரைக்கையில் பின்வரும் கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டும்:

### ஒழுங்கமைவுகள்

ஒரு பாடத்தின் எடுத்துரைப்பு மற்றும் அதை ஏற்கச் செய்தல் ஆகியவற்றிற்கு இயல்பான ஒழுங்கமைவுகள் முக்கியமானதாயிருக்கக் கூடும். இடம் மிக முக்கியமானதாக உள்ளது. கற்றுக் கொள்பவருக்கு மிகவும் நெருக்கமாகவோ அல்லது மிகவும் தொலைவிலோ ஆசிரியர் அமரக் கூடாது. மிகவும் நெருங்கி அமருதல் என்பது கற்றுக் கொள்பவரை இடம் நாடச் செய்து விடும், மற்றும் தொலைவில் அமருதல் என்பது கற்பவர், தாம் தூர இருப்பதாக உணரக் காரணமாகலாம், இவ்விதமாக ஒரு வெறுப்பான மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையை இது உருவாக்கும்.

ஆசிரியர், கற்பவருக்கு அருகாமையில், முடிந்தால் ஒரு மேசை அருகிலோ அல்லது நாற்காலியின்மீது கற்பவருக்கு அண்மையில் அமர வேண்டும். இவ்வகையான ஒரு ஒழுங்கமைவினால் ஆசிரியரும் கற்பவரும் ஒரே பாடத் தாளைப் பயன்படுத்திப் படிக்க முடிவதுடன் தேவைப்பட்டால் ஒரே வேதாகமத்தையும் பயன்படுத்திப் படிக்க முடியும். ஆசிரியர் வலது கைப் பழக்கம் உடையவரானால், வலது புறமாகவும், அவர் இடது கைப் பழக்கம் உடையவரென்றால் இடது புறமாகவும் அமர வேண்டும். இவ்விதமாக, கற்பவர் ஆசிரியரின் கரங்கள் மறைக்காத வண்ணம் அவர் எழுதுவதை அல்லது வரைவதைக் காண இயலும்.

### பொருட்கள்

இந்த ஆசிரியரின் வழிகாட்டி நூலில் உள்ள பாடங்களுக்கு பாடத்தாள், ஒரு வேதாகமம் மற்றும் ஒரு பேனா ஆகியவை ஆசிரியருக்குத் தேவைப் படும். ஆசிரியரிடம் நன்கு தரமான முறையில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் வேதாகமம் ஒன்று இருத்தல் வேண்டும். சில மொழிபெயர்ப்புக் களைப் பயன்படுத்தும் பொழுது, பாடத்தாளிலே அல்லது கோடிட்ட இடங்களில் வரும் வார்த்தைகளிலோ சிறிய மாற்றம் செய்வது தேவைப்படலாம். கற்பவரிடத்தில் தரமான மொழிபெயர்ப்பு வேதாகமம் இல்லையென்றால், அல்லது அவரால் நன்கு வாசிக்க முடியவில்லை என்றால், அல்லது வசனப் பகுதிகளைக் கண்டறிவது கஷ்டமாய் இருந்தால், ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து படிப்பதற்கென்று பெரிய எழுத்துக்களில் அச்சிட்ட வேதாகமம் பல வேளைகளில் உதவியாய் இருக்கும். மாணவர் வேதாகமத்தை நன்கு அறியாதிருந்தால், இந்தக் காரணத்திற்காக வசனங்களைக் கண்டறிய அதிகமான நேரத்தைச் செலவிடுதல் அவசியம் என்று கண்டால், பாடம் நன்கு கடந்து செல்வது என்பது இதனால் தடைப்படும், மற்றும் பாடத்தின் அழுத்தமான தன்மையானது இழந்து போகப்படும்.

சில வேளைகளில் ஆசிரியர் கூடுதலாக சில துண்டுத் தாள்களைப் பயன்படுத்த விரும்பலாம்; இருப்பினும் ஆசிரியர், பாடத்தாளைப் பயன்படுத்தினால், அவர் அத்தாளின் பின்புறத்தில் எழுத முடியும். இதைச் செய்வதால், மாணவர் எல்லாக் குறிப்புகளையும் மற்றும் வரைபடங் களையும் ஒரே தாளில் பெற்றுக் கொள்வார்.

### பாடத்தை எடுத்துரைத்தல்

பாடத்தை எடுத்துரைப்பதற்கு முன்பு கற்பவரைப் பற்றி அறியச் சற்று நேரம் எடுத்துக் கொள்ள ஆசிரியர் விரும்புவார். இது ஆசிரியர் கற்றுக் கொள்பவரைப் பற்றிப் புரிந்து கொள்ளக் கூடியதும் மற்றும் அவருடன் நல்லதொரு நட்புறவைக் கட்டியெழுப்பக் கூடியதுமான ஒரு குறுகிய ஆனால் அர்த்தம் நிறைந்த வேளையாக இருத்தல் வேண்டும்.

முதலாவது, ஆசிரியர் பாடத்தை அறிமுகப்படுத்துகின்றார். இவ்வேளையில், பின்தொடரும் பாடத்திற்கென்று ஆசிரியர் தயாரிப்புச் செய்கின்றார்.

இரண்டாவது, பாடத்தின் அறிமுகத்திற்குப் பிறகு, பாடத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். ஆசிரியர், ஒவ்வொரு பகுதியையும் அறிமுகப்படுத்தி, ஒவ்வொரு பகுதியையும் எடுத்துரைத்து, மற்றும் ஒவ்வொரு பகுதியையும் தொகுத்துரைக்கின்றார். முழுப்பாடத்தையும் கற்பித்த பிறகு, பாடத்தில் உள்ள யாவற்றையும் கற்பவர் புரிந்து கொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முழுப்பாடத்தையும் ஆசிரியர் மீண்டும் பார்வையிடுகின்றார்.

மூன்றாவது, பாடத்தின்போது கற்றுக் கொள்ளப்பட்டவைகளைச் சுருக்கியுரைத்தும், மாணவர் ஏற்றுக் கொண்டதாக ஆசிரியர் நம்புகின்ற முடிவுகளைத் தொகுத்துரைத்தும் ஆசிரியர் பாடத்தை முடிக்கின்றார்.

கடைசியாக, கற்பவரிடமிருந்து ஆசிரியர் ஒரு பதில்செயலை நாடுகின்றார், அதாவது, பாடத்தில் பதில்செயல் ஒன்று தெரிவிக்கப் பட்டிருந்தால் அதை மாணவரிடம் நாடுகின்றார்.

*ஆசிரியரின் வழிகாட்டி* நூலில் உள்ள பாடங்களை எடுத்துரைக்கும் பொழுது, ஒவ்வொரு வேத வசனப் பகுதியையும் வாசிக்கும் முன்பு ஆசிரியர் ஒரு கேள்வி கேட்க வேண்டும், இது கோடிட்ட இடங்களில் வர வேண்டிய வார்த்தைகளின் மீது கவனம் செலுத்துவதற்கு மாணவருக்கு உதவ வேண்டும். எங்கு என்ன எழுதுவது மற்றும் வார்த்தைகளை எவ்விதம் உச்சரிப்பது என்பது பற்றி கற்பவருக்குச் சிலவேளைகளில் சிரமங்கள் ஏற்படும் என்பதால் பாடத்தாளில் *ஆசிரியரே* கோடிட்ட இடங்களை நிரப்ப வேண்டும்.

பாடத்தாளில் உள்ள கோடிட்ட இடங்களை நிரப்புதல் என்பது பாடத்தாளை ஆசிரியரே வைத்திருத்தல் என்ற கூடுதல் பலனையுடைய தாயிருக்கும், மற்றும் இக்காரணத்தினால் அவர் எவ்விதம் இடையூறும் இன்றி, பாடத்தாளின் பின்புறத்தில் எழுதவோ அல்லது வரையவோ முடியும்.

தெரிவிக்கப்படும் வேத வசனப்பகுதி ஒவ்வொன்றையும் உரக்க வாசிக்கும்படி மாணவரிடத்தில் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். இது, கற்பவர் எந்த அளவு நன்றாக வாசிக்க முடியும் என்பதையும், அவர் வசனப் பகுதியைச் சரியாக வாசித்துள்ளாரா என்பதையும் அறிந்து கொள்ள ஆசிரியருக்கு உதவும். இது, வேதாகமத்தைக் கவனத்துடன் படித்தலின் முக்கியத்துவத்தை மாணவரின் சிந்தையில் ஆழப்பதியச் செய்வதுடன், வேதாகமம் கூறுகின்றவற்றின் செயல் தாக்கத்தினால் சிந்தையில் ஆழ் பதிவு ஏற்படவும் காரணமாய் இருக்கும்.

கோடிட்ட இடங்களில் வர வேண்டிய விடைகளை வேதாகமத்தில் கண்டறியும்படியாகக் கற்பவர்களை ஆசிரியர் உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வகையில், பாடம் நிறைவுறும் பொழுது ஆசிரியர், ‘‘இது நான் கூறியுள்ளவையா அல்லது வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றதா? இது நான் கூறியதாக மட்டும் இருப்பின் இதைப் புறக்கணித்து விடுங்கள், அல்லது இது வேதாகமம் கூறுவதாக இருப்பின் இதை ஏற்றுக் கொள்ளுங்கள்’’ என்று கேட்டுக் கொள்ள முடியும்.

மாணவரின் கற்கும் வேகத்திற்கு ஆசிரியர் தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டும். மிகவும் வேகமாகப் பாடத்தை நடத்துவது என்பது மாணவரை இழக்கக் காரணமாகி விடும், மற்றும் மிகவும் மெதுவாக நடத்துவது என்பது பாடத்தைச் சலிப்பூட்டுவதாக ஆக்கி விடும்.

அடுத்த கருத்திற்குச் செல்லுவதற்கு முன்பு நடத்திய ஒவ்வொரு கருத்தையும் மாணவர் புரிந்து கொண்டாரா என்று ஆசிரியர் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

கற்பவர் ஒரு கேள்வி கேட்டு, அதற்கான பதிலை ஆசிரியர் அறியாது இருந்தால், ஆசிரியர் அந்தக் கேள்வியைப் படிக்க நேரம் வேண்டும் என்று கேட்டு, பின்னொரு சமயத்தில் அம்மாணவருடன் அக்கேள்வியைப் படிக்க வேண்டும். கற்பவர், பாடத்துடன் தொடர்பற்றதும், விரைவில் பதில்

அளிக்க முடியாததுமான ஒரு கேள்வியைக் கேட்டால் அல்லது அப்படிப் பட்ட ஒரு பாடக் கருத்தை அறிமுகப்படுத்தினால், அப்படிப்பட்ட தொடர்பில்லாத பாடக் கருத்தைப் பற்றிப் பிற்பாடு படிப்பதற்கு அனு மதியை ஆசிரியர் கேட்க வேண்டும்.

பாடம் எடுத்துரைக்கப்பட்டு, மற்றும் ஆசிரியர் தமது எடுத்துரைப்பை மீண்டும் எண்ணிப் பார்க்கக் காலத்தைப் பெற்ற பிறகு, அவர் பாடத்தில் தரப்பட்டுள்ள எட்டு மதிப்பீட்டு வினாத் தாள்களையும் கவனத்தில் கொண்டு, தாம் எவ்வளவு நன்முறையில் பாடத்தை எடுத்துரைத்தார் என்பதை மதிப்பிட வேண்டும்.